Test Booklet No.
परीक्षा पुस्तिका संख्या

1 0 3 1 7 5

This booklet contains 24 pages.
इस पुस्तिका में 24 पृष्ठ हैं ।

# JBC – 12A

**PAPER I / प्रश्न-पत्र I**

**PART IV & V / भाग IV & V**

**Tamil Language Supplement**

**तमिल भाषा परिशिष्ट**

Test Booklet Code
परीक्षा पुस्तिका संकेत

**G**

**Do not open this Test Booklet until you are asked to do so.**

**इस परीक्षा पुस्तिका को तब तक न खोलें जब तक कहा न जाए ।**

**Read carefully the Instructions on the Back Cover (Page 23 & 24) of this Test Booklet.**

**इस परीक्षा पुस्तिका के पिछले आवरण (पृष्ठ 23 व 24) पर दिए निर्देशों को ध्यान से पढ़ें ।**

**For instructions in Tamil see Page 2 of this booklet. / तमिल में निर्देशों के लिए इस पुस्तिका का पृष्ठ 2 देखें ।**

## *INSTRUCTIONS FOR CANDIDATES*

1. This booklet is a supplement to the Main Test Booklet for those candidates who wish to answer **EITHER** Part IV (Language I) **OR** Part V (Language II) in **TAMIL** language, but **NOT BOTH**.
2. Candidates are required to answer Parts I, II, III from the Main Test Booklet and Parts IV and V from the languages chosen by them.
3. Questions on English and Hindi languages for Part IV and Part V have been given in the Main Test Booklet. Language Supplements can be asked for separately.
4. Use **Blue / Black Ball Point Pen only** for writing particulars on this page / marking responses in the Answer Sheet.
5. The CODE for this Language Booklet is **G**. Make sure that the CODE printed on **Side-2** of the Answer Sheet and on your Main Test Booklet is the same as that on this Language Supplement Booklet. In case of discrepancy, the candidate should immediately report the matter to the Invigilator for replacement of the Language Supplement Test Booklet.
6. This Test Booklet has **two** Parts, IV and V, consisting of **60** Objective Type Questions, each carrying 1 mark :
   Part IV : Language I – (Tamil) *(Q. 91 to Q. 120)*
   Part V : Language II – (Tamil) *(Q. 121 to Q. 150)*
7. Part IV contains 30 questions for Language I and Part V contains 30 questions for Language II. In this Test Booklet, only questions pertaining to Tamil language have been given. **In case the language/s you have opted for as Language I and/or Language II is a language other than Tamil, please ask for a Test Booklet that contains questions on that language. The languages being answered must tally with the languages opted for in your Application Form.**
8. **Candidates are required to attempt questions in Part V (Language II) in a language other than the one chosen as Language I (in Part IV) from the list of languages.**
9. Rough work should be done only in the space provided in the Test Booklet for the same.
10. The answers are to be recorded on the OMR Answer Sheet only. Mark your responses carefully. No whitener is allowed for changing answers.

## *परीक्षार्थियों के लिए निर्देश*

1. यह पुस्तिका मुख्य परीक्षा पुस्तिका की एक परिशिष्ट है, उन परीक्षार्थियों के लिए जो **या** तो भाग IV (भाषा I) **या** भाग V (भाषा II) **तमिल** भाषा में देना चाहते हैं, लेकिन **दोनों नहीं** ।
2. परीक्षार्थी भाग I, II, III के उत्तर मुख्य परीक्षा पुस्तिका से दें और भाग IV व V के उत्तर उनके द्वारा चुनी भाषाओं से ।
3. अंग्रेज़ी व हिन्दी भाषा पर प्रश्न मुख्य परीक्षा पुस्तिका में भाग IV व भाग V के अन्तर्गत दिए गए हैं । भाषा परिशिष्टों को आप अलग से माँग सकते हैं ।
4. इस पृष्ठ पर विवरण अंकित करने एवं उत्तर पत्र पर निशान लगाने के लिए **केवल नीले/काले बॉल पॉइंट पेन** का प्रयोग करें ।
5. इस भाषा पुस्तिका का **संकेत है G**. यह सुनिश्चित कर लें कि इस भाषा परिशिष्ट पुस्तिका का संकेत, उत्तर पत्र के **पृष्ठ-2** एवं मुख्य प्रश्न पुस्तिका पर छपे संकेत से मिलता है । अगर यह भिन्न हो तो परीक्षार्थी दूसरी भाषा परिशिष्ट परीक्षा पुस्तिका लेने के लिए निरीक्षक को तुरन्त अवगत कराएँ ।
6. इस परीक्षा पुस्तिका में **दो** भाग IV और V हैं, जिनमें **60** वस्तुनिष्ठ प्रश्न हैं, जो प्रत्येक 1 अंक का है :
   भाग IV : भाषा I — (तमिल) *(प्र. 91 से प्र. 120)*
   भाग V : भाषा II — (तमिल) *(प्र. 121 से प्र. 150)*
7. भाग IV में भाषा I के लिए 30 प्रश्न और भाग V में भाषा II के लिए 30 प्रश्न दिए गए हैं । इस परीक्षा पुस्तिका में केवल तमिल भाषा से संबंधित प्रश्न दिए गए हैं । **यदि भाषा I और/या भाषा II में आपके द्वारा चुनी गई भाषा(एँ) तमिल के अलावा है तो कृपया उस भाषा वाली परीक्षा पुस्तिका माँग लीजिए । जिन भाषाओं के प्रश्नों के उत्तर आप दे रहे हैं वह आवेदन पत्र में चुनी गई भाषाओं से अवश्य मेल खानी चाहिएँ ।**
8. **परीक्षार्थी भाग V (भाषा II) के लिए, भाषा सूची से ऐसी भाषा चुनें जो उनके द्वारा भाषा I (भाग IV) में चुनी गई भाषा से भिन्न हो ।**
9. रफ कार्य परीक्षा पुस्तिका में इस प्रयोजन के लिए दी गई खाली जगह पर ही करें ।
10. सभी उत्तर केवल OMR उत्तर पत्र पर ही अंकित करें । अपने उत्तर ध्यानपूर्वक अंकित करें । उत्तर बदलने हेतु श्वेत रंजक का प्रयोग निषिद्ध है ।

Name of the Candidate (in Capitals) : ____________________
परीक्षार्थी का नाम (बड़े अक्षरों में ) :

Roll Number (अनुक्रमांक) : in figures (अंकों में) ____________________

: in words (शब्दों में) ____________________

Centre of Examination (in Capitals) : ____________________
परीक्षा केन्द्र (बड़े अक्षरों में ) :

Candidate's Signature : ____________________ Invigilator's Signature : ____________________
परीक्षार्थी के हस्ताक्षर : निरीक्षक के हस्ताक्षर :

Facsimile signature stamp of Centre Superintendent ____________________

SEAL

இந்த நூற்கட்டு 24 பக்கங்கள் கொண்டது.

# JBC – 12A

தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு

**G**

## தாள் I

## பகுதி IV & V

## தமிழ் மொழி துணை நூற்கட்டு

**அவிழ்க்கச் சொல்லப்படும் வரை யாரும் இந்த நூற்கட்டை அவிழ்க்கக் கூடாது.**
**இந்த நூற்கட்டின் பின்பக்க உறைப்பகுதியில் (பக்கம் 23 & 24) காணப்படும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்.**

***தேர்வு எழுதுவோர்க்கான வழிகாட்டுதல் குறிப்புகள்***

1. இந்நூற்கட்டு முக்கிய தேர்வு நூற்கட்டுக்கான இணைப்பாகும். இது பகுதி IV (மொழி I) **அல்லது** பகுதி V க்கு (மொழி II) **தமிழ்** மொழியில் விடையளிக்க விரும்புவோர்க்கு மட்டுமே உரியது, **இரண்டிற்கும் உரியது அல்ல.**
2. தேர்வு எழுதுவோர் முக்கிய தேர்வு நூற்கட்டின் பகுதி I, II, III க்கும், அவர்கள் தேர்ந்தெடுத்த மொழிகளின் பகுதி IV, V ஆகியவற்றிற்கும் விடை அளிக்கவும்.
3. ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளின் பகுதி IV மற்றும் பகுதி V ற்கான வினாக்கள் முக்கிய தேர்வு நூற்கட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மொழி இணைப்பைத் தனியாக வாங்கிக் கொள்ள வேண்டும்.
4. இப் பக்கத்தில் வினவப்படும் உரிய விவரங்களை/விடைத்தாளில் நீர் மேற்கொள்ளும் பதில் வினையை **நீலம்/கறுப்பு மை பந்துருள்முனைப் பேனாவினால் மட்டும் நிரப்புக.**
5. இந் நூற்கட்டின் சங்கேதக் குறியீடு **G** ஆகும். இந் நூற்கட்டின் மீதும், இதன் **பக்கம் 2-லும்** அச்சாகி உள்ள சங்கேதக் குறியீடுகள் இரண்டும் ஒன்றே தானா என்பதைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்க. மேலும், உம் தேர்வு நூற்கட்டு எண்ணும், விடைத்தாள் எண்ணும் ஒன்றேதானா என்பதையும் சரிபார்த்து உறுதி செய்துகொள்க. இவை ஒன்றோடு ஒன்று முரணாக இருக்குமேயானால், தேர்வு எழுதுபவர் இதுபற்றி உடனே தேர்வு மேற்பார்வையாளர் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும், வேறொரு தேர்வு நூற்கட்டு மற்றும் வேறொரு விடைத்தாள் ஆகிய இரண்டையும் அவற்றிற்குப் பதிலாகக் கேட்டுப் பெற வேண்டும்.
6. இத் தேர்வு நூற்கட்டு **2** பகுதிகள் கொண்டது. ஒரே ஒரு மதிப்பெண் நேரிய **60** பல்விடை வினாக்கள் கொண்ட இப் பகுதிகள் முறையே IV & V என்றவாறாக அமையும்.
   பகுதி IV : மொழி I — (தமிழ்) *(வினாக்கள் 91 முதல் 120 வரை)*
   பகுதி V : மொழி II — (தமிழ்) *(வினாக்கள் 121 முதல் 150 வரை)*
7. பகுதி IV இல் மொழி I க்கும், பகுதி V இல் மொழி II க்கும் தலா 30 வினாக்கள். இத் தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிகளுக்குரிய வினாக்கள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளன. இத் தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிக்கான வினாக்கள் மட்டுமே உள்ளன. **தமிழ் மொழி நீங்கப் பிறமொழி எதனையேனும் மொழி I & II க்கு நீர் தெரிவு செய்திருப்பின் அம்மொழிக்குரிய வினாக்கள் கொண்ட தேர்வு நூற்கட்டைக் கேட்டுப் பெறவும். நீர் தேர்வு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழி தேர்ந்தெடுப்பும், தேர்வு நூற்கட்டில் எழுதியுள்ள விடை மொழியும் ஒன்றாகவே இருக்க வேண்டும்.**
8. **தேர்வு எழுதுவோர், மொழிகள் பட்டியலிலிருந்து தேர்ந்து கொண்ட மொழி I (பகுதி IV இல்) நீங்கலாகப் பிற வேறொரு மொழியை மொழி II (பகுதி V க்கு) தேர்ந்து கொண்டு விடையளிக்க வேண்டும்.**
9. இத் தேர்வு நூற்கட்டில் ஒதுக்கப்பட்டுள்ள முன்வரைவுப் பகுதியில் மட்டும் திருந்தாப் பதிவுகள் இடம்பெற வேண்டும்.
10. ஓஎம்ஆர் (OMR) விடைத்தாளில் மட்டுமே விடைகள் பதிவு செய்யப்பட வேண்டும். பதில் வினைகளைக் கவனமாகப் பதிவு செய்க. விடைகளைத் திருத்தம் செய்து மாற்றி எழுத வெண்ணிற மை ஏதும் பயன் படுத்தக் கூடாது.

தேர்வு எழுதுபவர் பெயர் (தலைப்பு எழுத்துகளில்) ____________________

தேர்வு வரிசை எண் : எண்ணில் ____________________

: எழுத்தில் ____________________

தேர்வு மையம் (தலைப்பு எழுத்துகளில்) ____________________

தேர்வு எழுதுபவர் கையொப்பம் ____________________

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் ____________________

Facsimile signature stamp of
Centre Superintendent ____________________

**தமிழை மொழிப்பாடம் I** ஆகத் தேர்வு செய்த மாணாக்கர்கள் மட்டுமே பின்வரும் பகுதியின் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

# பகுதி IV
# மொழிப்பாடம் I
# தமிழ்

***குறிப்பு :*** *கீழ்க்கண்ட வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து எழுதுக.*

**91.** 'படைப்பாற்றல் கொண்ட வாசிப்பு என்பதற்கான எடுத்துக்காட்டுகள்

(1) பொருள் புரிவதற்காக வாசித்தல்

(2) ஒரு பொருள் குறித்த கூடுதலான தகவல்களைத் திரட்டுவதற்காக நூலகத்தில் குறிப்புகள் எடுத்தல்

(3) தொடர்புடைய தகவல்களை இணையத் தளங்களில் தேடுதல்

(4) வெவ்வேறு பார்வைகளைக் கொண்டு நாடகப்படுத்தல், பாத்திர மேற்று நடித்தல் மறுமுறை எழுதிப்பார்த்தல்

**92.** மேலோட்டமாகப் படித்தல், என்பது என்ன ?

(1) கருத்துகள், தகவல்களின் பயன்பாடு அல்லது அமைப்பு முறை குறித்து வாசிக்கும் போதே மதிப்பீடு செய்தல்

(2) ஒரு நூலின் பொது உள்ளடக்கம், கருத்துகள் அல்லது கருத்துச் சுருக்கம் என்பதை அறியும் வகையில் வேகமாகப் பார்வையிடுதல்

(3) ஒரு நூலில் உள்ள தேவையற்ற விளக்கங்களை விட்டு விட்டு குறிப்பான கருத்துகள் எல்லது தகவல்களைத் தேடி அறிதல்

(4) தேவையான தகவல்களை வாசிப்பு நிலையில் இருந்து எடுத்து வடிவத்திற்கு மாற்றுதல்

**93.** 'நூலின் ஒத்திசைவுத்தன்மை' (textual cohesion) என்பதன் பொருள்

(1) வாக்கியங்கள்/பத்திகளுக்கு இடையே உறவை அமைக்க ஏற்றபடி பிரதிப் பெயரெச்ச சொற்கள், இடைச்சொற்கள் அல்லது ஒத்த பொருளுடைய சொற்களைப் பயன்படுத்துவது

(2) ஒரு கதையின் வடிவத்திற்கேற்ப பத்திகளை அமைப்பது

(3) விபரங்களை கருத்துத்தொடர்ச்சி மாறாமல் ஏற்ற பத்திகளில் எடுத்துரைக்கும் ஒரு முறை

(4) உதிரியான தகவல்களை நீண்ட தொடர்ச்சியான பாடமாக எழுதுவது

**94.** 'மெய்யான கவனிப்பு' (Authentic listening) என்பது

(1) எழுதப்பட்ட அல்லது தன்னியல்பான ஒரு பேச்சினை ஆசிரியர் உரத்து வாசிக்கும் போது கவனித்தல்

(2) ஒரு பணிக்குத் தேவையான தகவலைப் பெறுவதற்காக கருத்தூன்றிக் கவனித்தல்

(3) கவனிப்பு சார்ந்த பயிற்சியின் போது கவனிப்போர் ஒருவர் ஒரு பணியை முடித்த நிலை

(4) இயல்பான உரையாடல்களை நேரடியாகவோ ஒலிப்பதிவிலோ கேட்டறிதல்

**95.** பேச்சிலிருந்து எழுத்தை வேறுபடுத்திக் காட்டும் பண்புகள் எவை ? எழுத்து என்பது

(1) பொதுவாக நெகிழ்ந்த முடிவுகளைக் கொண்டிருப்பது

(2) மிகைப்படக் கூறல் அல்லது கூறியது கூறுதல் இல்லாதது

(3) இயல்பொழுக்கு சார்ந்த செயல்பாட்டுடன் அதிக உறவுடையது

(4) இலக்கண அமைப்புகளை முழுமையாகப் பின்பற்றாதது

**96.** ஆங்கில வருப்பில் 'பரிமாற்றம் கொண்ட பேச்சு' என்பது குறிப்பது

(1) தனிப்பேச்சு அல்லது பொதுவான சொற்பொழிவு என்பதற்கு மாறான உரையாடல்

(2) தன்னியல்பாகவும் தன்னம்பிக்கையுடனும் தடையின்றி மொழியைப் பயன்படுத்துவது

(3) கவனிப்போருடைய எதிர்வினைக் கேற்ப பேச்சின் தன்மையை மாற்றிய மைப்பதற்கான தேவை

(4) ஒருவருடைய பேச்சு அல்லது எழுத்து உருவாக்கிய விளைவினைக் குறித்து தரப்பட்ட தகவல்

**97.** 'தெளிவான தொடர்வரிசை' (Sound Sequence) என்பதை கற்போரின் பேச்சுத்திறனை வளர்க்க என்ன செய்ய வேண்டும் ?

(1) வெளிப்படையான உண்மைத் தகவல்கள் அல்லது தொடர்களை முன்வைத்து மாணவர்களை தம் கருத்தை கதையாகக் கூறக் கேட்பது

(2) பதிவு செய்யப்பட்ட ஒலிகளைக் கேட்க வைத்து அதற்கான விளக்கம் மற்றும் பொருளை ஒரு கதை வடிவில் கூறும் படி மாணவர்களைப் பணிப்பது

(3) பேச்சுச் செயல்பாட்டுடன் இணைக்கப் பட்ட திட்டமிடப்பட்ட சொல்வதெழுதுதல் தருதல்

(4) படக்கதைகள் அல்லது வேறுவகையான காட்சி வடிவங்களைப் பயன்படுத்தி அவை தொடர்பான பேச்சை உருவாக்குதல்

**98.** தனிப் பேச்சுகள் வழியாக மதிப்பிடப்படும் 3 துணைத் திறமைகள்

(1) பேச்சாளரின் தெளிவு நிலை, பேச்சுத் தொனி, கருத்தை உறவுபடுத்தும் தன்மை

(2) சைகைகள், பேச்சாளரின் தெளிவு நிலை, பேச்சாளரின் தோற்றம்

(3) பேச்சுத் தொனி, குரல் தன்மை, வேகம்

(4) குரல் தன்மை, தோரணை, பேச்சாளரின் தோற்றம்

**99.** 'கற்றலுக்கு துணைபுரியாத சூழல்' என்பது

(1) மாணவர்களுக்கு எந்த வசதிகளும் கிடைக்காத நிலை

(2) ஹிந்தி/தாய்மொழி பேச்சுமொழியாக உள்ள நிலை

(3) வகுப்பறையில் மட்டுமே ஆங்கிலம் புழக்கத்தில் உள்ள நிலை

(4) வீட்டில் ஆங்கிலம் பேசப்படாத நிலை

**100.** 'பிரிதல் அமைப்பின்' (Cognitive Style) வகைகளை உருவாக்குபவை

(1) சூழலைச் சார்ந்திருத்தல் / சூழலைச் சாராதிருத்தல்

(2) போட்டித்தன்மை/கூட்டுழைப்புத் தன்மை

(3) விரித்துப் பொருளுரைத்தல் / உள்ளதை உரைத்தல்

(4) செயல் ஊக்கம் / பணிவு

**101.** ஆய்வறிவு அடிப்படையிலான கற்றல் (EBL) என்பது

(1) மொழிகற்றல் பற்றிய அணுகுமுறைகுறித்த கோட்பாட்டின் ஒரு கூறு

(2) திறமைகளைத் திட்டமிட்டு எடுத்துரைத்தல் மற்றும் பயிற்சி செய்தல், உள்ளடக்கத்தைக் கற்றறிதல்

(3) பருண்மையான தேசியத்தன்மை கொண்ட நடைமுறைசார்ந்த பாடத்திட்டம்

(4) மாணவர்கள் கூடிச் சிந்தித்து சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் தம் அனுபவங்களை விளக்கமாக எடுத்துரைப்பதற்கும் உரிய கற்பித்தல் உத்திமுறை

**102.** மொழி கற்றவில் ஒரு 'செறிவான காலகட்டம்' என்பது

(1) மொழிப் பயன்பாட்டை பயிற்சிசெய்ய மாணவர்களுக்கு ஒதுக்கப்படும் சிறப்பு நேரம்

(2) மற்ற எந்த காலகட்டத்தையும் விட மொழியை இலகுவாகக் கற்கும் நிலை

(3) வகுப்பில் அறிதல் குறித்த மதிப்பீடு நடப்பதற்கு முன்னுள்ள காலப்பகுதி

(4) எந்த மொழிக் கல்வியிலும் உள்ள சிறந்த முன்தயாரிப்பு காலப்பகுதி

**103.** ஒரு கட்டுரை எழுதத் தேவைப்படும் இரண்டு திறமைகள்

(1) துல்லியமாக எழுதுதல், இணைப்புச்சொற் களைப் பயன்படுத்துதல்

(2) சொற்களுக்கு பதிலாகக் குறியீடுகளைப் பயன்படுத்தல், துலக்கமாக எழுதுதல்

(3) ஒரு பாடப்பகுதியை உம் சொந்த சொற்களில் திரும்ப எழுதுதல், ஒத்த பொருளுடைய சொற்களைப் பயன்படுத்தல்

(4) முக்கியத்துவம் நிறைந்த, முக்கியத்துவம் குறைந்த கருத்துகளை அடையாளம் காணுதல், கருத்துக்களுக்கிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகளை ஒப்புக் கொள்ளுதல்

**104.** 'காலம்காட்டும் சொற்களை' வேறுபடுத்தி அறிவதில் ஒரு மாணவனுக்குச்சிக்கல் ஏற்படும் போது கடைபிடிக்க வேண்டிய திருத்த முறை

(1) நடைமுறை வாழ்க்கையின் வெவ்வேறு சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாணவர்கள் இணைந்து வாக்கிய அமைப்பு களைப் பயிற்சி செய்தல்

(2) குறிப்பிட்ட வாக்கிய அமைப்புக்களை பயிற்சி செய்யப் போதுமான வாய்ப்பை அளிப்பது

(3) மாணவர்களே தம் சொந்த வாக்கியங்களை அமைப்பது பயிற்சியின் போது ஆசிரியர் அவர்களை வழிமுறைப்படுத்துவது

(4) வாக்கிய அமைப்புக்களை வகுப்பறைக்கு வெளியிலும் கற்றுக் கொள்வது

**105.** சிசிஈ (CCE) அறிமுகப்படுத்தப்படுவதன் மூலம்

(1) மாணவர்கள் மீது ஆசிரியர்களின் கட்டுப்பாடு அதிகமாக முடிகிறது

(2) மாண்வர்களை மதிப்பீடுசெய்வது தொடர்ச்சியாக நடக்கிறது

(3) வெவ்வேறு வகையான செயல்பாடு களில் மாணவர்கள் ஈடுபட முடிகிறது

(4) கல்வியாளர்களுக்கு கூடுதல் அழுத்தம் தரப்படுகிறது

***குறிப்பு :*** *கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியை நன்கு படித்து, தரப்பட்டிருக்கும் வினாக்களுக்குத் (வினா எண் 106 – 114) தக்க விடையைத் தேர்ந்தெடுக்கவும்.*

சங்க காலத்தில் நாட்டை ஆட்சிபுரிவதில் அரசனுக்கு உதவியாக ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும் இருந்தன. பிற்காலத்தில் பல்துறை அமைச்சர்களும் பல்துறை அலுவலர்களும் இருந்தனர் என்பது கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. அரசனுடனிருந்து ஆட்சி முறைகளைக் கவனித்த அமைச்சர்கள், 'உடன் கூட்டத்து அதிகாரிகள்' எனப்பட்டார்கள். நாடு பல மண்டலங்களாகவும், மண்டலம் வளநாடு, நாடு, கூற்றம், சிற்றூர் என்றும் பலவாறு பிரிக்கப்பட்டிருந்தன.

ஒவ்வொரு கிராமமும் ஊரவையார் ஆட்சியில் இருந்தது. ஒவ்வோர் ஊரும் பல குடும்புகளாகப் (wards) பிரிக்கப்பட்டிருந்தது. கால்வேலி நிலமும் சொந்த மனையும் உடையவராய், பல சாத்திர நூல்களையும் கற்றுப் பிறர்க்கு உணர்த்த வல்லவராய், செயலாற்றலில் திறமை உடையவராய், முப்பத்தைந்துக்கு மேற்பட்டு எழுபத்தைந்துக்கு உட்பட்ட வயதினராய், நல்வழியில் சம்பாதித்த பொருளும் தூய வாழ்க்கையும் உடையவராய், மூன்று ஆண்டுகட்கு உட்பட்டு எந்த நிறைவேற்றுக் கழகத்திலும் உறுப்பினராய் இராதவராய் இருப்பவரே ஊரினரால் தேர்ந்தெடுக்க உரிமை உடையவராவர்.

அவையில் உறுப்பினராய் இருந்து கணக்குக் காட்டாதவரும், ஐவகைப் பெருந்தீமைகள் செய்தவரும், கிராமக் குற்றப் பதிவுப் புத்தகத்தில் பதிவு

செய்யப்பட்டவரும், கள்ளக் கையெழுத்திட்டவரும், பிறர் பொருளை. வவ்வினோரும், குற்றம் காரணமாகக் கழுதையின்மீது ஏற்றப்பட்டவரும், கையூட்டு (லஞ்சம்) வாங்கினவரும், கிராமத் துரோகி என்று கருதப்பட்டவரும், இவர்கட்டு உறவினரும் தம் வாழ் நாள் முழுமையும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெறுதற்குத் தகுதியற்றவராவர்.

தேர்தல் நடைபெறும் நாளில் அரசாங்க அதிகாரி ஒருவர், சபை கூடுவதற்கான மாளிகையில் ஊரார் அனைவரையும் கூட்டுவர். கூட்டத்தின் நடுவில் ஒரு குடம் வைக்கப்படும். அங்குள்ள பெரியவருள் ஒருவர், அக்குடத்துள் ஒன்றுமில்லை என்பதை ஊரார்க்குக் காட்டிக் கீழே வைப்பர். பின்னர், ஒவ்வொரு குடும்பினரும் தம் குடும்புக்கு ஏற்ற ஒருவர் பெயரைத் தனித்தனி ஓலையில் எழுதுவர்; அவ் வோலைகள் சேர்த்து அக்குடும்பின் பெயரெழுதிய வாயோலையால் மூடப்பட்டுக் கட்டப்படும்; அக்கட்டு, குடத்துள் வைக்கப்படும். இவ்வாறே எல்லாக் குடும்பினரும் குடவோலை இடுவர். பின்னர், ஊர்த் தலைவரான முதியவர், சிறுவன் ஒருவனை அழைத்துக் குடத்திலிருந்து ஓர் ஓலைக்கட்டை எடுப்பிப்பர்; அதனை அவிழ்த்து வேறொரு குடத்தில் இட்டுக் குலுக்குவர்; அவற்றுள் ஒன்றை அச்சிறுவனைக் கொண்டு எடுப்பிப்பர்; அதனைத் தாம் வாங்கிக் கிராமக் கணக்கனிடம் தருவர். அவன், தன் கையில் ஒன்றும் இல்லையென்பதை அவையோர்க்குக் காட்டி, அவ்வோலையைப் பெற்று, யாவரும் கேட்க அதில் எழுதப்பட்டுள்ள பெயரை உரக்க வாசிப்பான். பின்னர், அதனை அங்குள்ள அறிஞர் எல்லோரும் வாசிப்பர். பிறகு அப்பெயர் ஓர் ஓலையில் வரையப் படும். இங்ஙனம் தேர்ந்தெடுக்கப்பட்டவரே, அக் குடும்பின் பிரதிநிதியாவர். இவ்வாறு பிற குடும்பு கட்கும் தேர்தல் நடைபெறும். இங்ஙனம் தேர்ந்தெடுக்கப்பட்டவரே ஓராண்டுவரை ஊராட்சிக் கழகத்தினர் ஆவர்.

ஒவ்வோர் ஊராட்சிக் கழகத்திலும் சில உட் கழகங்கள் இருக்கும். தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினருள் வயதிலும் கல்வியிலும் அறிவிலும் அநுபவத்திலும் மிக்கவர் பன்னிருவரைச் சம்வத்சர வாரியராகத் தேர்ந்தெடுப்பர். மற்றவருட் சிலர் ஏரிவாரியராகவும், சிலர் பொன்வாரியராகவும், சிலர் பஞ்ச வாரியராகவும், மற்றுஞ் சிலர் தோட்டவாரி யராகவும் தேர்ந்தெடுக்கப்படுவர். இங்ஙனம் ஊராட்சிக் கழகம் ஊர்த்தேவைகட்கு ஏற்பப் பல உட்கழகங்களாப் பிரிந்து நின்று கடனாற்றும்.

நியாய விசாரணை செய்தலும் அறநிலையங்களை மேற்பார்வை இடுதலும் சம்வத்சர வாரியர் கடமை. ஏரி, குளம், ஊருணி முதலிய நீர் நிலைகளைப் பாதுகாத்தலும் விளை நிலங்கட்டு வேண்டுமளவு நீரைப் பாயச் செய்தலும் ஏரி வாரியத்தார் கடமை. நிலங்கள், தோட்டங்கள் இவற்றைப் பற்றிய எல்லாவற்றையும் கவனித்தல் தோட்டவாரியர் தொழிலாகும். பலவகையாலும் வாங்கப்பட்ட காசுகளை ஆராய்வது பொன்வாரியர் பொறுப்பாகும். ஊரில் எப்பொழுதேனும் பஞ்சம், வெள்ளச்சேதம் இவை ஏற்படின், ஊராரைக் காப்பதற்கு முன்னேற்பாடாக

ஆண்டுதோறும் குடிமக்களிடம் 'பஞ்ச' நெல் முதலியன வாங்கிச் சேமித்தல் பஞ்ச வாரியர் தொழிலாகும். இவ்வூராட்சியினர் 'பெருமக்கள்' எனவும் 'ஆளுங்கனத்தார்' எனவும் வழங்கப்பட்டார்கள். இவர்களது ஆட்சிக்குரிய மாளிகை ஒன்று ஒவ்வொரு சிற்றூரிலும் இருந்தது.

106. ஆட்சி புரிவதில் அரசனுக்கு உதவியாக இருந்தவை :

(1) எண் பேராயமும் இளையோர் குழுவும்

(2) அமைச்சரவையும் மக்கள் மன்றமும்

(3) ஐம்பெருங்குழுவும் எண் பேராயமும்

(4) மக்கள் மன்றமும் ஐம்பெருங்குழுவும்

107. நாடுகள் பிரிக்கப்பட்டிருந்த அமைப்பு முறை

(1) கூற்றம், மண்டலம், வளநாடு, சிற்றூர் நாடு

(2) சிற்றூர், கூற்றம், நாடு, வளநாடு, மண்டலம்

(3) நாடு, கூற்றம், மண்டலம், சிற்றூர், வளநாடு

(4) நாடு, மண்டலம், வளநாடு, கூற்றம், சிற்றூர்

108. கழுதையின் மீது ஏற்றப்படுவோர்

(1) குற்றம் புரிந்தோர்

(2) கடன்பட்டோர்

(3) பெரியோரைப்பழித்தோர்

(4) கல்வியறிவற்றோர்

109. உறுப்பினருக்கான வயது வரம்பு

(1) எழுபத்தைந்துக்குள் முப்பதுக்கு மேல்

(2) முப்பத்தைந்துமேல் எழுபத்தைந்துக்குள்

(3) முப்பத்தைந்துக்கு மேல் எண்பதுக்குள்

(4) இருபதுக்கு மேல் அறுபதுக்குள்

110. குடவோலை இடுவோர்

(1) சான்றோர்

(2) ஊரினர்

(3) முதியோர்

(4) குடும்பினர்

111. ஊராட்சிக் கழகத்தினரின் பொறுப்புக்காலம்

(1) ஐந்தாண்டு

(2) மூன்றாண்டு

(3) ஈராண்டு

(4) ஓராண்டு

112. சம்வத்சர வாரியத்தின் உறுப்பினர்கள்

(1) எண்வர்

(2) பதின்மர்

(3) பன்னிருவர்

(4) ஐவர்

113. ஏரி வாரியத்தார் கடமை

(1) ஏரி, குளம், ஊருணியில் ஆற்றுநீர் தேக்குதல் நீரைக் காத்தல்

(2) நீர் வரி பெறுதல் மீன் பிடித்தல்

(3) ஏரி, குளம், ஊருணிபாதுகாத்தல் நிலங்களுக்கு நீர்பாயச் செய்தல்

(4) ஆறுகள் காத்தல் நீர் பாயச் செய்தல்

**114.** ஊராட்சியினர் அழைக்கப்பட்ட விதம்
(1) அமைச்சர், அதிகாரிகள்
(2) சான்றோர், முதியோர்
(3) பெருமக்கள், ஆளுங்கனத்தார்
(4) பெரியோர், பெருங்குடி மக்கள்

***குறிப்பு*** : *கீழே உள்ள கவிதையைப் படித்து, பின்னர் உள்ள வினாக்களுக்குப் (வினா எண் 115 – 120) பொருத்தமான விடைகளைத் தேர்ந்தெடுக்க.*

எண்ணங்கள் போலே - விரி
வெத்தனை! கண்டாய் - இரு
கண்ணைக் கவர்ந்திடும்
ஆயிரம் வண்ணங்கள்
கூடிச் சுடர்தரும் வான்!
வண்ணங்களைப் போய்க் - கரு
மாமுகில் உண்டு - பின்பு
பண்ணும் முழக்கத்தை, மின்னலை,
அம்முகில் பாய்ச்சிய வானவில்லை
வண்ணக் கலாப - மயில்
பண்ணிய கூத்தை - அங்கு
வெண்முத்து மல்லிகை கண்டு சிரித்தனள்!
மேல்முத்தை வான் சொரிந்தான்!
விண்முத் தணிந்தாள் - அவள்
மேனி சிலிர்த்தாள் - இதைக்
கண்ணுண்ண உண்ணக் கருத்தினி
லின்பக் கடல்வந்து பாய்ந்திடுதே!

*- பாரதிதாசன்*

**115.** வான் தரும் விரிவு எதனைப்போல் உள்ளது ?
(1) கண்ணைக்கவரும் வண்ணம்
(2) சுடர் போல் உள்ளது
(3) எண்ணங்கள்போல் விரிந்தது
(4) வண்ணமாய் உள்ளது

**116.** வான் தருவது என்ன ?
(1) ஆயிரம் வண்ணங்கள் கொண்ட விரிவு
(2) கண் கவரும் காட்சியும் ஒளியும்
(3) மழையைப் பொழியும் முகில்
(4) ஆயிரம் வண்ணங்கள் கொண்ட சுடர்

**117.** மாமுகில் உண்பது எவற்றை ?
(1) வண்ணங்களை
(2) சுடர்களை
(3) துளிகளை
(4) எண்ணங்களை

**118.** கரு மாமுகில் பண்ணுபவை
(1) ஒளியை, மழையை
(2) முழக்கத்தை மின்னலை
(3) சுடரை முழக்கத்தை
(4) வண்ணத்தை, வானவில்லை

**119.** மல்லிகை ________ சிரித்தது.
(1) மின்னலைக் கண்டு
(2) வானவில்லைக் கண்டு
(3) கூத்தைக் கண்டு
(4) முழக்கத்தைக் கண்டு

**120.** பாரதிதாசன் இன்பத்தை எதுவாக உருவகிக்கிறார் ?
(1) கடலாக
(2) மின்னலாக
(3) வானவில்லாக
(4) முகிலாக

**தமிழை மொழிப்பாடம் II** ஆகத் தேர்வு செய்த மாணாக்கர்கள் மட்டுமே பின்வரும் பகுதியின் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

# பகுதி V
# மொழிப்பாடம் II
# தமிழ்

***குறிப்பு** : கீழ்க்கண்ட வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து எழுதுக.*

**121.** 'எப்போதும் தளராத பண்பை' (never give up attitude) உருவாக்க பொருத்தமான செயல்பாடுகளில் ஒன்று, மாணவர்கள்

(1) ஆங்கில வகுப்பின் போது வெளியே சென்று விளையாட முதல்வரின் அனுமதியைப் பெற்ற பொழுது

(2) ஆசிரியர்-பெற்றோர் சந்திப்பின்போது பிரபலமான இருபாடல்களைப்பாடி தம் கலைத்திறமை மற்றும் கைவினைத் திறன்களை வெளிப்படுத்திக் காட்டியபோது

(3) தாம் செய்த காகித விமானங்களில் மாற்றங்களைச் செய்து அதிக தூரம் அவற்றைப் செலுத்தும் பரிசோதனையைச் செய்து தம் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட பொழுது

(4) மாணவர்கள் தம் வாழ்ககையில் சந்தித்த கடினமான சூழ்நிலைகளைக் குறித்து கூட்டாக வரைபடத்தினை உருவாக்கிய பொழுது

**122.** தொடக்கநிலைக் கல்வியை மதிப்பீடு செய்ய உகந்த முறை

(1) 50 சொற்களைக்கொண்டு ஒரு நூல்/பாடம் பற்றிய மதிப்பீடு எழுத வைத்தல்

(2) சொற்பொருள் மற்றும் வெளிப்படுத்தும் முறை என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட வினாவிடை

(3) ஒரு கதை/பாடம் என்பதில் உள்ள பாத்திரங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட எழுத்துத் தேர்வு

(4) மாணவர்கள் எவ்வளவு படித்திருக்கிறார்கள் என்பதைக் கண்டறியும் நேர்முகத் தேர்வு

**123.** மொழி கற்றல் என்பது

(1) குழந்தைகள் தம் தாய்மொழியை கற்பதற்கேற்ற சூழலை உருவாக்கித் தருவதற்கேற்ற ஒரு உத்தி முறை

(2) தேவையான சொற்களை மனப்பாடம் செய்து பயன்படுத்துவது

(3) இலக்கண விதிகளை பகுத்தறிந்து புரிந்து கொள்வது. மற்றும் சொற்களை மனப்பாடம் செய்வது என்ற இரண்டையும் உள்ளடக்கியது

(4) மனித மூளையின் அடிப்படைத்திறனின் காரணமாக ஒரு தாய் மொழியையோ அல்லது இரண்டாம் மொழியையோ கற்றுக் கொள்வதைக் குறிக்கிறது

124. பாடத்திட்ட உருவாக்கம் பின்வரும் படிமுறை வரிசையில் அமைகிறது

(1) நோக்கங்களை வடிவமைத்தல், தேவைகளை மதிப்பீடு செய்தல், மதிப்பீடு, பாடநூல்கள்/படித்தல் அனுபவங்களைத் தேர்ந்தெடுத்தல்

(2) நோக்கத்தை வடிவமைத்தல், தேவைகளை மதிப்பீடு செய்தல், பாடம்/படித்தல் அனுபவங்களை தேர்ந்தெடுத்தல், மதிப்பீடு

(3) பாடநுல்கள்/படித்தல் அனுபவங்களைத் தேர்ந்தெடுத்தல், தேவைகளை மதிப்பீடு செய்தல், நோக்கங்களை வடிவமைத்தல், மதிப்பீடு

(4) தேவைகளை பகுத்தாய்தல், நோக்கங்களை வடிவமைத்தல், பாடநூல்கள்/படித்தல் அனுபவங்களைத்தேர்ந்தெடுத்தல், மதிப்பீடு

125. கற்போருக்குத் துணை செய்யும் அனுபவத்தைத் தரும் சாதனம்

(1) கள ஆய்வுகள், நேரடி கவனிப்புகள்

(2) பொருள்கள், மாதிரிவடிவங்கள்

(3) சொற்கள், மாதிரி ஆய்வுகள்

(4) காட்சிப்பலகைகள், படக்காட்சிகள்

126. கணினி வழி கற்பித்தல் (CAI) முறையில் கற்போர் 'மாதிரி வடிவம்' (Simulation mode) என்பதை உணர்வது

(1) பரிசோதனை மற்றும் பிழைகளின் வழியே சிக்கல்களைத் தீர்க்கப் பழகுதல்

(2) நிஜ வாழ்வு முறை மற்றும் நிகழ்வுகளை அனுபவமாக உணரும் போது

(3) தகவல்களை துண்டு துண்டாகப் பெற்று அதனைத் தொடரும் கேள்விகளுக்கு உடனடியாக பதிலளிக்கும் போது

(4) தொடர்ந்த பயிற்சியுடன் கூடிய திரும்பத் திரும்பச் செய்யப்படும் பழகுமுறை

127. 'கவனித்தலுக்கான ஊக்கமளிப்பு' என்பது

(1) மாணவர்கள் முழுமையாக கவனிக்கும் நிலையை உருவாக்கி ஒரு பணியை செய்து தரச் செய்தல்

(2) மீண்டும் கூடி தாங்கள் கவனித்ததைப் பகிர்ந்து கொள்ளும் தனித்தனிக் குழுவாக மாணவர்களுக்கு அளிக்கப்படும் உள்ளீடு

(3) வழிகாட்டுதல்களை மட்டும் தரக்கடிய இடைவெளியுடன் கூடிய தகவல்கள்

(4) மதிப்பீடு செய்வதற்காக நன்முறையில் அமைந்த விளக்க உரையைக் கவனித்தல்

**128.** பேச்சு மதிப்பீடு செய்யப்படும் போது 'வழக்கமான பரிமாற்றம்' (interactional routine) என்பது இதனை உள்ளடக்கி யுள்ளது

(1) மதிப்பீடு செய்பவரிடம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்கள் / இடங்கள் / நிகழ்ச்சிகளை ஒப்பிட்டுக் கூறுதல்

(2) மொழிப்பொருள்களைக் கையாளுதல், தன் பங்களிப்பைத் தருதல், மற்றவர்கள் பங்களிக்க இடம் தருதல்

(3) நமது பள்ளி அல்லது அதன் சூழலை வெளிப்படையாக விவரித்துக் கூறுதல்

(4) மற்றவருடன் தொலைபேசி உரையாடல் செய்தல்

**129.** எழுதுதலில் மறுநினைவூட்டல் திறன்கள் என்பவை

(1) படித்தல் / கவனித்தலின் பொழுது தகவல்களை அமைத்தல்

(2) குறிப்புகள் தயாரித்தல், குறிப்பு எடுத்தல்

(3) வரைபடம் உருவாக்குதல் தொகுப்புரை உருவாக்குதல்

(4) மேற்கோள் குறிப்புகளை விரிவாகத்திரட்டும் திறன்

**130.** இலக்கண விளையாட்டுகளில் உள்ள 'விழிப்புணர்வு மேம்படுத்தல்' என்பது மாணவர்களுக்கு அளிப்பது

(1) ஒரு குறிப்பிட்ட தலைப்பின் கீழ் தாம் கற்ற அமைப்புகளைப் பயன்படுத்தி ஒருவருடன் ஒருவர் தகவல் பரிமாற்றம் செய்தல்

(2) தாங்கள் கற்ற அமைப்புகளை தெளிவாக அறிந்து நினைவுகொள்ளுதல்

(3) கொடுக்கப்பட்ட செயல்பாடடை நிறைவேற்ற ஒத்துழைத்தல்

(4) ஆசிரியர் அமைப்புகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் போது அதனுடன் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளுதல், அதன் பொருளை உணருதல்

**131.** 'ஆழ்நிலை அமைப்பு' (deep structure) என்ற நோம் சாம்ஸ்கியின் கருத்து குறிப்பது

(1) மனித மூளையின் உள்ளார்ந்த திறனுடன் உறவுடைய, எல்லா மொழிகளுக்கும் அடிப்படையாக அமைந்திருக்கும் பொது இலக்கண அமைப்பு

(2) தீவிரமான ஆய்வின் மூலமாகக் கண்டறியப்பட்ட மறைந்திருந்த இலக்கண விதிகளின் தொகுப்பு

(3) ஒப்பீட்டு மொழியியல் மீது ஆர்வத்தைத்தூண்டக் காரணமாக அமைந்த மாற்றுநிலை இலக்கணம்

(4) உலகின் மிகப் பெரும்பானமை மக்களால் ஆங்கிலம் துணை மொழியாகப் பயன்படுத்தப்படும் ஒரு போக்கு

**132.** பாடத்திட்டத்தில் 'கற்போர் சார்ந்தவகை' (bottom up model) என்பது

(1) மாணவர் களின் மீது மறைமுகமான தாக்கத்தை செலுத்தக கூடிய தேவை அடிப்படையிலான தொலைநிலைக் கல்வி

(2) கற்போருக்கு எளிதாக இருக்கும்படி பாடத் திட்டத்தை அமைக்க உருவாக்கப்பட்ட மென்பொருள் தொகுப்பை அடிப்படையாகக் கொண்ட கற்றல்

(3) பல விதமான பாடங்களைத் தேர்ந் தெடுக்க உகந்த வகையிலும், செயல் முறைப் பயிற்சியின் வழியே கற்பதை ஊக்குவிக்கும் வகையிலும், அமைக்கப்பட்ட மாணவர் களுக்குத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தை அளிக்கும் பாடத்திட்டம்

(4) வேலை வாய்ப்புககு உரிய வகையில் அமைக்கப்பட்ட கல்வி

**133.** மனிதநேய அணுகுமுறை குறிப்பாக இதனை நோக்கி அமைக்கப் பட்டுள்ளது

(1) உள்ளடக்கத்திற்கு ஏற்றவகையில் அதனை எடுத்துரைக்கும் வரிசைமுறையை கற்றுத்தரும் வழிமுறை

(2) அதன் எல்லாவிதமான சிறப்புத்தன்மைகளையும் கொண்ட கல்விப்புலங்களை கற்றுத் தெளிவது

(3) புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப தான் கற்ற அமைப்பு, உள்ளடக்கம், கோட்பாடுகள் மற்றும் விதிமுறைகளைப் பயன்படுத்துதல்

(4) மாணவர்களே அமைப்பு முறைகளைக் கண்டுபிடிக்க ஏற்ற வாய்ப்புகளை உருவாக்கும் செயல் முறை

**134.** 'சிறப்புத் தேவைகள் கொண்ட வகுப்பறை' என்பது

(1) நிரந்தரமான ஆசிரியர்களுக்கு உதவிபுரியும் கூடுதல் ஆசிரியர் களைக் கொண்டது

(2) தேவைக்கேற்ப சாதனங்கள் பொருத்தப்பட்டது

(3) தனித்தனியே அமைக்கப்பட்டது

(4) எல்லா வகையான மாணவர்களையும் ஒருங்கிணைப்பது

**135.** படிப்பதற்கு முன்பான செயல்பாடுகளின் நோக்கம் என்ன ?

(1) மகிழ்ச்சி நிறைந்த அனுபவமாக கற்பதை அமைத்துத் தருவது

(2) புதிய சொற்களைக் கற்பிப்பது

(3) மாணவர்களின் அறிவைப் பெருக்குவது

(4) பாடத்தின் மீது ஆர்வத்தைத் தூண்டுவது

**குறிப்பு** : *கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியை நன்கு படித்து, தரப்பட்டிருக்கும் வினாக்களுக்குத் (வினா எண் 136 – 141) தக்க விடையைத் தேர்ந்தெடுக்கவும்.*

ஒரு மொழியிலுள்ள நூல்கள் அவ்வக் காலத்தின் நாகரிகத்திற்கு ஏற்ப மாறுபடுகின்றன. ஒரு நூல் இயற்றப்படும் காலத்தில் எவை எவை நாகரிகமாகவும் அறிஞர்களுடைய செயல்களாகவும் வியக்கத்தக்க செய்திகளாகவும் உணரப்பட்டனவோ அவற்றை அங்ஙனமே ஆசிரியர் தம் நூலில் புலப்படுத்தியிருப்பார். பண்டைத் தமிழ் நூல்களில் அகமும் புறமுமாகிய வரை யறைக்குட்பட்டு ஆயிரக்கணக்கான

செய்யுட்கள் புலவர்களால் இயற்றப்பெற்றன; அகத்துறைச் செய்யுட்கள் அளவின்றி யெழுந்தன. அக்காலத்தில் அவற்றிற்குச் சிறந்த மதிப்பு இருந்து வந்தது. பிற்காலத்தில் வந்த புலவர்கள் அத்தகைய இச்செய்யுட்களைப் பாடவில்லை. மிகப் பிற்காலத்தில் வடமொழியிலுள்ள நூற்றுக்கணக்கான புராணங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன.
தலங்களைப்பற்றிய ஆராய்ச்சியும் தல வழிபாடும் மலிந்திருந்த அக்காலத்திலே கவிஞர்களுக்கு அத்தகைய இலக்கியப் படைப்பே ஊக்கத்தை உண்டாக்கியது.

இக்காலத்தில் ஆங்கில அறிவின் தொடர்பினால் இலக்கியப் படைப்பு வேறுபட்டிருக்கின்றது. ஆங்கிலம் அறிந்த தமிழ்ப் புலவர்கள் வொர்ட்ஸ்வொர்த்தினுடைய பாக்களை மொழிமெயர்ப்பதிலும், ஷெல்லியின் வருணனைகளைத் தழுவிச் செய்யுள் இயற்றுவதிலும் முனைந்து நிற்கின்றனர். இத்தகைய வேறுபாடுகள் நிகழ்வதற்குக் காரணம் என்ன ? காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப மனிதனுடைய நடை உடை பாவனைகள் மாறி வருகின்றன அல்லவா ? அவ்வாறே அவனுடைய நோக்கங்களும் விருப்பமும் மாறுகின்றன; அவனால் இயற்றப் படும் நூல்களும் வேற்றுமை அடைகின்றன.

**136.** ஒரு மொழியிலுள்ள நூல்கள் எதற்கேற்ப மாறுகின்றன ?

(1) காலத்தின் உணர்ச்சிக்கு

(2) காலத்தின் நாகரிகத்திற்கு

(3) காலத்தின் அரசியலுக்கு

(4) காலத்தின் வாழ்க்கைக்கு

**137.** பண்டைத் தமிழ் நூல்களில் செய்யுள்கள் எந்த வரையறைக்குட்பட்டு இயற்றப்பட்டுள்ளன ?

(1) அகம், புறம்

(2) அன்பு, பக்தி

(3) நிலம், அரசு

(4) குடும்பம், கடவுள்

**138.** தமிழில் மொழிபெயர்க்கப்பட்டவை

(1) வடமொழி வரலாறுகள்

(2) வடமொழி இலக்கணங்கள்

(3) வடமொழி வேதங்கள்

(4) வடமொழிப் புராணங்கள்

**139.** ஆங்கிலம் அறிந்த தமிழ்ப்புலவர்கள் எவருடைய வருணனைகளைத் தழுவி செய்யுள் இயற்ற முனைகின்றனர் ?

(1) ஷெல்லி

(2) வொர்ட்ஸ் வொர்த்

(3) ஷேக்ஸ்பியர்

(4) டி.எஸ். இலியட்

**140.** இலக்கியப்படைப்பு இக்காலத்தில் வேறுபடுவதற்குக் காரணம்

(1) புராணங்களின் தொடர்பு

(2) நவீன அறிவியலின் தொடர்பு

(3) ஆங்கில அறிவின் தொடர்பு

(4) திரைப்படங்களின் தொடர்பு

**141.** நடை, உடை, பாவனைகள் மாறிவருவது போல

(1) கருத்தும், காட்சியும் மாறுகின்றன

(2) நாடும், ஊரும் மாறுகின்றன

(3) உணவும், வீடும் மாறுகின்றன

(4) நோக்கமும் விருப்பமும் மாறுகின்றன

***குறிப்பு** : கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியை நன்கு படித்து, தரப்பட்டிருக்கும் வினாக்களுக்குத் (வினா எண் 142 – 150) தக்க விடையைத் தேர்ந்தெடுக்கவும்.*

புதுமைப்பித்தன் சிறுகதை எழுத்தாளர் மட்டும் அல்லர், புதினங்கள். அரசியல் கட்டுரைகள் விமரிசனக் கட்டுரைகள், கதைகள், நாடகங்கள், திரை உரையாடல்கள், கவிதைகள், மொழிபெயர்ப்புக் கதைகள், வாழ்க்கை வரலாற்று நூல்கள் என்று பல வகைப் படைப்புகளையும் தந்தவர் ஆவார். தினமணிஆசிரியராக இருந்த போது அவர் நூல் மதிப்புரைகளையும் எழுதியுள்ளார். அன்னையிட்ட தீ அவரது முற்றுப் பெறாத நாவல் ஆகும். புதுமைப்பித்தன். உலகச் சிறுகதைகளை மொழி பெயர்த்துள்ளார். அவை உலகத்துச் சிறுகதைகள் என்ற பெயரில் வெளிவந்தன. இத்தாலியச் சர்வாதிகாரி பெனிட்டோ முசோலினியின் வாழ்க்கை வரலாற்றை பாசிஸ்ட் ஜடாமுனி என்ற பெயரில் வெளியிட்டார். ஜெர்மானியச் சர்வாதிகாரி அடால்ப் ஹிட்லர் வாழ்க்கை வரலாற்றைக் கப்சிப் தர்பார் என்ற பெயரில் எழுதியுள்ளார். ஆனால் அதன் இறுதிப் பகுதி டி. இராமரத்தினம் என்பவரால் முடிக்கப்பெற்றது புதுமைப்பித்தன் பக்த குசேலர் வாக்கும் வக்கும் என்ற நாடகங்களையும் எழுதியுள்ளார். மேலும் அவர் தம் மனைவிக்கு எழுதிய கடிதங்களும் அண்மையில் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன.

இப்படி புதுமைப்பித்தன் பல்வேறு இலக்கிய வகைகளில் தடம் பதித்துள்ளார் என்றாலும் சிறுகதைப் படைப்புகள் தாம் அவரைப் பாராட்டுக்குரியவராக்கின. புதுமைப்பித்தன் சொவி என்னும் புனைபெயரில் அரசியல் கட்டுரைகளையும் புபி என்னும் புனைபெயரில் சிறுகதைகளையும் ரசமட்டம் என்னும் பெயரில் விமரிசனக் கட்டுரைகளையும் வேளூர் வே கந்தசாமிக் கவிராயர் என்னும் பெயரில் கவிதைகளையும் எழுதியுள்ளார். மேலும் உத்தன் நந்தி கபாலி, சுக்ராச்சாரி என்னும் பல பெயர்களில் எழுதியுள்ளார் என்றாலும் புதுமைப்பித்தன் என்ற பெயர்தான் நிலைத்து.

புதுமைப்பித்தன் உலக இலக்கியத் தேர்ச்சி பெற்றவர். அப்டன் சிங்களேர், கால்ஸ் வொர்த்தி, இப்சன் ப்ராங்க் ஹாரிஸ் பெர்னார்ட்ஷா போன்ற மேனாட்டு ஆசிரியர்களை நன்கு கற்றிருந்தார். ஆன்டன் செக்காவ், எட்கர் ஆலன்போ, மாப்பஸான் தாமஸ் மான் காஃப்கா, ஜேம்ஸ் ஜாய்ஸ் என்னும் உலகப் புகழ் பெற்ற படைப்பாளிகளை நன்றாகப் படித்திருந்தார். மாப்பஸானின் கதைகளைத் தழுவிச் சில கதைகளையும் எழுதியிருக்கிறார். தமிழ் இலக்கியங்களிலும் நன்கு தேர்ச்சி

பெற்றிருந்தார். பழமை புதுமை என்ற இரண்டையும் கையாண்டு எழுதும் முறையைப் புதுமைப்பித்தன் தம் பாணியாக வைத்துக் கொண்டிருந்தார். கதைக்கரு. நடை இரண்டிலும் தனித்தன்மையை நிலைநாட்டியுள்ளார்.

கூரிய சமூகப் பார்வை, சிந்தனை ஆழம், தீவிரத் தன்மை உடைய வெளிப்பாடு, எதிர்க்கத் தயங்காத போர்க்குணம், அடங்காமை. புதுமை செய்யத் துடிக்கும் இயல்பு, எழுத்தின் மீது ஆழ்ந்த பற்று, தம்மைப் பற்றிய விமரிசனக் கண்ணோட்டம், நகைச்சுவை என்று பல குணங்களின் ஒட்டு மொத்தக் கலவைதான் புதுமைப்பித்தன்.

புதுமைப்பித்தன் 1933 முதல் 1946 வரையிலான 12 ஆண்டுகளே எழுத்துப் பணியில் இருந்தார். வாழ்க்கையில் உயர்ந்த நிலையில் உள்ளவர்களைப் பற்றி மட்டுமே இலக்கியம் எழுத வேண்டும் என்று அதுவரை இருந்து வந்த நிலைமையை மாற்றித் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களையும் தம் கதைகளில் படைத்துக் காட்டியுள்ளார். மேலும் அவர் மக்களிடமிருந்து தூர விலகி நின்று கதை சொல்லாமல் மக்களோடு ஒட்டி நின்றே தம் கதைகளைப் படைத்துள்ளார். புதுமைப்பித்தன் தம் கதைகளைப் பற்றி, "பொதுவாக என்னுடைய கதைகள் உலகத்துக்கு உபதேசம் செய்து உய்விக்க ஏற்பாடு செய்யும் ஸ்தாபனம் அல்ல. பிற்கால நல்வாழ்வுக்கு சௌகரியம் பண்ணி வைத்திருக்கும் இன்ஷீரன்ஸ் ஏற்பாடும் அல்ல. எனக்குப் பிடிக்கிறவர்களையும் பிடிக்காதவர்களையும் கிண்டல் செய்து கொண்டிருக்கிறேன் என்றும் இந்தக் கதைகள் யாவும் கலை உத்தாரணத்திற்கு என்று கங்கணம் கட்டிக் கொண்டு செய்த சேவை அல்ல. இவை யாவும் கதைகள். உலகை உய்விக்கும் நோக்கமோ, கலையை எருவிட்டுச் செழிக்கச் செய்யும் நோக்கமோ எனக்கோ என் கதைகளுக்கோ சற்றும் கிடையாது என்றும், "நான் கேட்டது, கண்டது, கனவு கண்டது. காண விரும்பியது காண விரும்பாதது ஆகிய சம்பவக் கோவைகள்தாம் இவை. தவிரவும் பழைய கதைகளை எடுத்துக்கொண்டு அதை இஷ்டமான கோணங்களில் எல்லாம் நின்று பார்க்க எங்களுக்கு உரிமை உண்டு." என்றும் கூறியுள்ளார்.

புதுமைப்பித்தன் 98 கதைகளை எழுதியுள்ளார். அவர் மணிக்கொடியில் எழுதிய 29 கதைகளைப் புதுமைப்பித்தன் கதைகள் என்ற பெயரில் நவயுகப் பிரசுராலயம் வெளியிட்டுள்ளது ஆறுகதைகள், நாசகாரக் கும்பல் பக்த குசலோ என்ற அவரது பிற நூல்களையும் அதே நிறுவனம் வெளியிட்டுள்ளது. கலைமகள் பதிப்பகம் காஞ்சனை தொகுதியையும் ஸ்டார் பிரசுரம் ஆண்மை என்ற தொகுதியையும் வெளியிட்டன. ஐந்திணைப் பதிப்பகம் புதுமைப்பித்தனின் மொத்தச் சிறுகதைகளையும் வெளியிட்டது. அண்மையில் காலச்சுவடு பதிப்பகம் புதுமைப்பித்தனின் அனைத்துச் சிறுகதைகளையும் வெளியிட்டுள்ளது.

**142.** புதுமைப்பித்தன் திமைணி ஆசிரியராக இருந்தபோது ________ எழுதியு ள்ளார்.

(1) பாடல்களையும்

(2) நாடகங்களையும்

(3) நூல் மதிப்புரைகளையும்

(4) கவிதைகளையும்

**143.** புதுமைப் பித்தனின் முற்றுப் பெறாத நாவல்

(1) வாக்கும் வக்கும்

(2) அன்னையிட்டதீ

(3) ஜடாமுனி

(4) கப்சிப் தர்பார்

**144.** புதுமைப்பித்தனின் தனித்தன்மை நிலைநாட் டப்பட்டது

(1) கதைக்கரு, நடை இரண்டிலும்

(2) மொழிநடை, பேச்சு இரண்டிலும்

(3) கதைக்கரு, உரையாடல் இரண்டிலும்

(4) வடிவம், விவரணை இரண்டிலும்

**145.** புதுமைப் பித்தன் தம் பாணியாக் வைத்திருந்தது

(1) பழமை புதுமை என்ற இரண்டையும் கையாண்டு எழுதுவது

(2) புதுமையை கையாள்வது

(3) பழமையைப் பின்பற்றுவது

(4) எளிமை, புதுமையை கலந்து எழுதுவது

**146.** புதும்மப்பித்தன் எதன் மீது ஆழ்ந்த பற்று கொண்டிருந்தார் ?

(1) வாழ்க்கை மீது

(2) புதுமைமீது

(3) நகைச்சுவைமீது

(4) எழுத்தின் மீது

**147.** புதுமைப்பித்தன் எவ்வாறு தம் கதைகளைப் படைத்துள்ளார் ?

(1) மக்களோடு ஒட்டி நின்று

(2) மக்களைக் கண்டித்து

(3) தலைவர்களைப் புகழ்ந்து

(4) சமுகத்தை மறுத்து

**148.** புதுமைப்பித்தன் யாரைக் கிண்டல் செய்து கொண்டிருப்பதாகக் கூறுகிறார் ?

(1) உயர்ந்த நிலையில் உள்ளவர்களை

(2) பார்த்தவர்களையும் பார்க்காதவர் களையும்

(3) பிடிக்கிறவர்களையும் பிடிக்காதவர் களையும்

(4) மந்திரிகளையும் அதிகாரிகளையும்

**149.** புதுமைப்பித்தனின் அனைத்துச் சிறுகதை களையும் வெளியிட்ட பதிப்பகங்கள் இரண்டு

(1) ஸ்டார் பிரசுரம், ஐந்திணை

(2) ஐந்திணை, காலச்சுவடு

(3) கலைமகள், நவயுகப் பிரசுராலயம்

(4) காலச்சுவடு, கலைமகள்

**150.** புதுமைப்பித்தனின் கவிதைகளுக்கான புனைப்பெயர்

(1) புலமைப் பித்தன்

(2) உத்தன்

(3) வேளூர் வே. கந்தசாமிக் கவிராயர்

(4) சொ. விருத்தாசலம்

# SPACE FOR ROUGH WORK

## SPACE FOR ROUGH WORK

## SPACE FOR ROUGH WORK

**கீழ்வரும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும் :**

1. பக்கம் 2-இல் ஒஎம்ஆர் (OMR) விடைத்தாளில் உள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய நான்கு விடைகளில் மிகச் சரியான ஒரு விடையை மட்டும் நீலம்/கறுப்பமை பந்துருள் முனைப் பேனாவினால் முழுவதுமாக மைபட்டை தீட்டப்பட வேண்டும்.

2. தேர்வு எழுதுபவர் அவர்தம் விடைத்தாள் மடிந்திருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். விடைத் தாளில் எவ்விதமான அடித்தல் திருத்தலும் செய்தல் கூடாது. விடைத்தாளில் உரிய இடத்தில் மட்டுமன்றிப் பிற எங்கும் தேர்வு வரிசை எண்ணைக் குறிப்பிடக் கூடாது.

3. எச் சூழ்நிலையிலும் (தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு/எண்ணும் தேர்வு விடைத்தாள் குறியீடு/எண்ணும் தம்முள் முரண்படும் நிலையில் மட்டுமன்றி) தேர்வு எழுதுபவருக்கு வேறொரு விடைத்தாள் இணை அளிக்கப்படாது. ஆகவே தேர்வு நூற்கட்டையும் விடைத்தாளையும் தேர்வு எழுதுபவர் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்.

4. தேர்வு எழுதுபவர் தேர்வு வருகைத் தாளில் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தேர்வு நூற்கட்டு மற்றும் விடைத்தாள் குறியீடு மற்றும் எண்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.

5. தேர்வு எழுத அனுமதி அட்டை தவிர மற்றபடி அச்சு/கையெழுத்துக் குறிப்புகள், துணுக்குகள், பேஜர், செல்போன், மின்சாதனம் எதனையும் தேர்வுக் கூடத்திற்குள் தேர்வு எழுதுவோர் கொண்டு செல்லக் கூடாது.

6. தேர்வு மேற்பார்வையாளர் வினவும் போது தேர்வு எழுதுபவர் தம் அனுமதி அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

7. தேர்வுக் கண்காணிப்பாளர்/தேர்வு மேற்பார்வையாளர் சிறப்பு அனுமதியின்றித் தேர்வு எழுதுபவர் தம் இருக்கையிலிருந்து வெளியேறக் கூடாது.

8. தேர்வு மையத்திற்குள் நுழைதல், தேர்வு மையத்திலிருந்து வெளியேறுதல் ஆகிய இரு வேளையிலும் தேர்வு வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாமலும், விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்காமலும் வெளியேறக் கூடாது. வெளியேறுகையில் வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாத தேர்வு எழுதுபவரின் விடைத்தாள் திருப்பி அளிக்கப்படாததாகக் கருதப்படும். இந்த முறை மீறிய செயலுக்கு உரிய எதிர்வினை மேற்கொள்ளப்படும்.

9. மின் இயங்கு/மின் இயங்காக் கணிப்பான்களுக்கு அனுமதி இல்லை.

10. தேர்வு ஆணையத்தின் அனைத்துவிதமான நடத்தைவிதிமுறைகளுக்கும் தேர்வு எழுதுபவர் கட்டுப்படுவது கட்டாயம். முறை மீறிய செயல்கள் மீது தேர்வாணையத்தின் விதிமுறைகள்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

11. எச் சூழலிலும் தேர்வு நூற்கட்டும் விடைத்தாளும் தனித்தனியே பிரிக்கப்படக் கூடா.

12. தேர்வு எழுதி முடித்தபின் தேர்வு எழுதுபவர் தம் விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்க வேண்டும். தேர்வு எழுதுவோர் இத் தேர்வு நூற்கட்டை உடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

**READ CAREFULLY THE FOLLOWING INSTRUCTIONS :**

1. Out of the four alternatives for each question, only one circle for the correct answer is to be darkened completely with Blue/Black Ball Point Pen on Side-2 of the OMR Answer Sheet. The answer once marked is not liable to be changed.
2. The candidates should ensure that the Answer Sheet is not folded. Do not make any stray marks on the Answer Sheet. Do not write your Roll No. anywhere else except in the specified space in the Answer Sheet.
3. Handle the Test Booklet and Answer Sheet with care, as under no circumstances (except for discrepancy in Test Booklet Code or Number and Answer Sheet Code or Number), another set will be provided.
4. The candidates will write the correct Test Booklet Code and Number as given in the Test Booklet / Answer Sheet in the Attendance Sheet.
5. Candidates are not allowed to carry any textual material, printed or written, bits of papers, pager, mobile phone, electronic device or any other material except the Admit Card inside the examination hall/room.
6. Each candidate must show on demand his / her Admission Card to the Invigilator.
7. No candidate, without special permission of the Superintendent or Invigilator, should leave his / her seat.
8. The candidates should not leave the Examination Hall without handing over their Answer Sheet to the Invigilator on duty and sign the Attendance Sheet twice. Cases where a candidate has not signed the Attendance Sheet a second time will be deemed not to have handed over the Answer Sheet and dealt with as an unfair means case.
9. Use of Electronic / Manual Calculator is prohibited.
10. The candidates are governed by all Rules and Regulations of the Board with regard to their conduct in the Examination Hall. All cases of unfair means will be dealt with as per Rules and Regulations of the Board.
11. No part of the Test Booklet and Answer Sheet shall be detached under any circumstances.
12. **On completion of the test, the candidate must hand over the Answer Sheet to the Invigilator in the Room / Hall.** ***The candidates are allowed to take away this Test Booklet with them.***

**निम्नलिखित निर्देश ध्यान से पढ़ें :**

1. प्रत्येक प्रश्न के लिए दिए गए चार विकल्पों में से सही उत्तर के लिए OMR उत्तर पत्र के पृष्ठ-2 पर केवल एक वृत्त को ही पूरी तरह नीले/काले बॉल प्वाइन्ट पेन से भरें । एक बार उत्तर अंकित करने के बाद उसे बदला नहीं जा सकता है ।
2. परीक्षार्थी सुनिश्चित करें कि इस उत्तर पत्र को मोड़ा न जाए एवं उस पर कोई अन्य निशान न लगाएँ । परीक्षार्थी अपना अनुक्रमांक उत्तर पत्र में निर्धारित स्थान के अतिरिक्त अन्यत्र न लिखें ।
3. परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र का ध्यानपूर्वक प्रयोग करें, क्योंकि किसी भी परिस्थिति में (केवल परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र के संकेत या संख्या में भिन्नता की स्थिति को छोड़कर) दूसरी परीक्षा पुस्तिका उपलब्ध नहीं करायी जाएगी ।
4. परीक्षा पुस्तिका / उत्तर पत्र में दिए गए परीक्षा पुस्तिका संकेत व संख्या को परीक्षार्थी सही तरीके से हाज़िरी-पत्र में लिखें ।
5. परीक्षार्थी द्वारा परीक्षा हॉल/कक्ष में प्रवेश कार्ड के सिवाय किसी प्रकार की पाठ्य सामग्री, मुद्रित या हस्तलिखित, काग़ज़ की पर्चियाँ, पेजर, मोबाइल फोन, इलेक्ट्रॉनिक उपकरण या किसी अन्य प्रकार की सामग्री को ले जाने या उपयोग करने की अनुमति नहीं है ।
6. पूछे जाने पर प्रत्येक परीक्षार्थी, निरीक्षक को अपना प्रवेश-कार्ड दिखाएँ ।
7. अधीक्षक या निरीक्षक की विशेष अनुमति के बिना कोई परीक्षार्थी अपना स्थान न छोड़ें ।
8. कार्यरत निरीक्षक को अपना उत्तर पत्र दिए बिना एवं हाज़िरी-पत्र पर दुबारा हस्ताक्षर किए बिना परीक्षार्थी परीक्षा हॉल नहीं छोड़ेंगे । यदि किसी परीक्षार्थी ने दूसरी बार हाज़िरी-पत्र पर हस्ताक्षर नहीं किए तो यह माना जाएगा कि उसने उत्तर पत्र नहीं लौटाया है और यह अनुचित साधन का मामला माना जाएगा ।
9. इलेक्ट्रॉनिक / हस्तचालित परिकलक का उपयोग वर्जित है ।
10. परीक्षा-हॉल में आचरण के लिए परीक्षार्थी बोर्ड के सभी नियमों एवं विनियमों द्वारा नियमित हैं । अनुचित साधनों के सभी मामलों का फैसला बोर्ड के नियमों एवं विनियमों के अनुसार होगा ।
11. किसी हालत में परीक्षा पुस्तिका और उत्तर पत्र का कोई भाग अलग न करें ।
12. **परीक्षा सम्पन्न होने पर, परीक्षार्थी कक्ष / हॉल छोड़ने से पूर्व उत्तर पत्र कक्ष-निरीक्षक को अवश्य सौंप दें ।** ***परीक्षार्थी अपने साथ इस परीक्षा पुस्तिका को ले जा सकते हैं ।***

SEAL